**OS. 53/2024**

**நாள். 24.03.2026**

**வா.சா. 1 – கண்ணதாசன்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

என் பெயர் கண்ணதாசன். என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து நான்குபேர். அதில் மூத்தவர் பெயர் பிச்சை. 2வது நபர் பெயர் பாரதிதாசன், 3வது நபர் பெயர் நான், 4வது நபர் காளிதாஸ். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 5 இலக்க சொத்துக்கள். 1ம் இலக்க சொத்து யார்பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் பிரதிவாதி பெயரில். 2ம் இலக்க சொத்து யார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் என் அப்பா கண்ணையா பெயரில். 2ம் இலக்க சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 8 ¾ சென்டு. அந்த சொத்து ஒருகிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டதா அல்லது இரண்டு கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டதா இரண்டு கிரையப்பத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டது. 2ம்இலக்க சொத்து 1985ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டதா என்றால் இல்லை, 1980 மற்றும் 1984. 2ம் இலக்க சொத்து கிரையம் பெறப்பட்டபோது நானும், என் தம்பியும் பிறக்கவில்லை என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்து 2003ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். 2003ம் ஆண்டு என் வயது என்னவென்றால் 18 வயது, கல்லூரியில் முதலாமாண்டு படித்துக்கொண்டிருந்தேன். 2வது அண்ணனுக்கு என்ன வயது என்றால் 22. என் தம்பிக்கு 16 வயது. 2003ம் ஆண்டில் நாங்கள் அனைவரும் படித்துக்கொண்டிருந்தோமா என்றால் என் அண்ணன் பாரதி சென்ட்ரிங் கான்ட்ராக்ட் வேலை பார்த்து வந்தார், நாங்கள் படித்து வந்தோம். 2003 காலகட்டத்தில் என் பெற்றோருக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. 2003ம் ஆண்டு என் பெற்றோர்கள் சம்பாதித்து வந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2003ம் ஆண்டு காலகட்டத்தில் என் அண்ணன் பிச்சை சென்ட்ரிங் கான்ட்ராக்ட், கேபிள் டிவி, மதுபான பார் மற்றும் விறகு வியாபாரம் போன்ற பலதொழில்கள் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னென்ன தொழில் செய்துவந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது உண்மையல்ல. 2003ம் ஆண்டில் பிரதிவாதி சொத்து கிரையம் பெறும்போது என் பெற்றோருக்கோ, எனக்கோ என் மற்ற சகோதரர்களுக்கோ எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தன் சுயவருமானத்தை கொண்டு கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துக்கள் எவ்வளவு என்றால் 2 ஏக்கர். அதில் என் தகப்பனாருக்கு கிடைத்த பாகம் 42 சென்டு என்றால் சரிதான். அந்த 42 சென்டும் தனித்தனியாக இரண்டு இடங்களில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தை பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பாக அடமானம் வாங்கி பிறகு கிரைய அக்ரிமென்ட் போட்டு கிரையம் வாங்கினார் என்றால் அது உண்மையல்ல. பிரதிவாதி அடமான பத்திரத்தையும், கிரைய ஆவணம் மற்றும் கிரைய பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது உண்மையான ஆவணங்கள் அல்ல. பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டும், என் பெற்றோர் வருமானத்தை கொண்டும் பிரதிவாதி பெயரில் தாவா 1ம் இலக்க சொத்து கிரையம் பெறப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டையும் பிரதிவாதி 2002ம் ஆண்டு கட்டத்தொடங்கி 2003ம் ஆண்டு முடித்தார் என்றால் என் அப்பாதான் வீடுகட்டினார். எப்போது கட்டினார் என்பது தெரியாது. பிரதிவாதிதான் 2ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டை கட்டினார் என்றும், வீட்டை கட்டுவதற்கு தேவையான சாமான்கள் அவர் பெயரில் வாங்கப்பட்டு அதற்குரிய ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த ஆவணங்கள் உண்மையல்ல. தாவா 1ம் இலக்க சொத்திலும், 2ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டிலும் வாதிகளாகிய எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும்,

தாவா 1, 2 இலக்க சொத்தை பொறுத்து எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.